# இரண்டாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

தமிழ்

மதிப்பெண்: 60

வகுப்பு - நான்கு

நேரம்: 2 மணி

I. அ) **சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** 5 × 1 = 5

1. 'உழவர்களின் நண்பன்' என்றழைக்கப்படுவது ______________

   அ) மண்புழு ஆ) புறா இ) காகம்

2. 'வேதாந்த சூடாமணி' நூலை இயற்றியவர் ______________

   அ) பாரதிதாசன் ஆ) கவிமணி இ) சிவப்பிரகாச சுவாமிகள்

3. போற்றி ஒழுகப்படும் பண்பு ______________

   அ) சினம் ஆ) பொறையுடைமை இ) அறிவில்லாமை

4. ஆர்கானிக் என்பது ______________ யைக் குறிக்கும்.

   அ) இயற்கை ஆ) செயற்கை இ) உழவு

5. காலம் ______________ வகைப்படும்.

   அ) நான்கு ஆ) மூன்று இ) இரண்டு

ஆ) **கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 × 1 = 5

6. வணிகர் ______________ நாட்டைச் சேர்ந்தவர்.

7. 'உலகப்பொதுமறை' எனப் போற்றப்படும் நூல் ______________

8. பசுவுக்கு நீதி வழங்கிய மன்னர் ______________

9. முத்தமிழ் ______________ ______________ ______________ என மூன்று வகைப்படும்.

10. புத்திக் கூர்மையாக செயல்பட்டது ______________

**II. அ) பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.** **3 × 1 = 3**

11. மாடித்தோட்டம் 12. மக்களெல்லாம் 13. நிறையுடைமை

**ஆ) பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக.** **3 × 1 = 3**

14. இயற்கை + உரம் 15. மெய் + பொருள் 16. நினைத்து + இருந்தேன்

**இ) பின்வரும் சொற்களுக்குப் பொருள் கூறுக.** **3 × 1 = 3**

17. பரம்பரை 18. பொறை 19. உற்சாகம்

**ஈ) பொருத்துக.** **4× 1 = 4**

20. அழல் கதிர் - அழ. வள்ளியப்பா
21. மெய்ப்பொருள் - அச்சம்
22. குழந்தைப்பாடல் - உண்மைப் பொருள்
23. பாம்பு வருகிறதே - கதிரவனின் ஒளி

**உ) பின்வரும் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.** **2 × 1 = 2**

24. வேக வேகமாய் 25. நடந்து நடந்து

**III. அ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ஏழனுக்கு மட்டும்)** **7 × 2 = 14**

26. கறுப்புக் கோட்டு, வெள்ளைச் சட்டை காவல்காரருக்குக் கொடுத்தது யார்?
27. மண்புழுக்களினால் என்ன பயன்?
28. உலகம் எப்போது மகிழும்? - நன்னெறிப்பாடல் மூலம் உணர்த்துக.
29. பனிமலைக்கு எதற்காக விலங்குகள் சென்றன?
30. நாவைக் காக்காவிடில் ஏற்படும் துன்பம் என்ன?
31. பசுவின் துயரம் என்ன? அதனை மன்னன் எவ்வாறு போக்கினான்?
32. விறகுவெட்டி, மன்னரிடம் தம் மனக்குறையாக என்ன கூறினார்?
33. ஊர்வலத்திற்குச் சென்ற யானை என்னவாயிற்று?
34. குதிரை ஏன் நாய்க்கு உதவி செய்ய நினைத்தது?

**ஆ) பின்வரும் பாடலை அடிமாறாமல் எழுதுக.** 4 + 2 = 6

35. ‘இன்சொலால்’ எனத் தொடங்கும் நன்னெறிப் பாடலை எழுதுக.

36. ‘தன்னைத்தான்’ எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக.

**IV. பின்வரும் வினாவிற்கு விடை எழுதுக.** 1 × 5 = 5

37. மாமாவின் திருமணத்திற்குச் செல்வதற்காக இரண்டு நாட்கள் விடுப்பு வேண்டி வகுப்பாசிரியருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக.

(அல்லது)

‘உழவுக்கு வந்தனை செய்வோம்’ என்ற தலைப்பில் ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.

**V. பின்வரும் வினாவிற்கு அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு விடை எழுதுக.** 10 × 1 = 10

38. பெரிய குன்றுகள் ________________ (மலை / மழை)

39. நடந்து கொண்டிருக்கும் செயல் ________________ (நிகழ்காலம் / எதிர்காலம்)

40. வால்க்கை நெரிகள் ________________ (சொல்லிலுள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.)

41. ஆடு புல் ________________ (மேய்)

42. நாம் ஏழைகளிடம் ________________ காட்ட வேண்டும். (இரக்கம் / இறக்கம்)

43. ஆமை மெதுவாக ________________

44. இரவெல்லாம் பூக்காடு பகலெல்லாம் வெறும் காடு. அது என்ன?

45. மணம், மனம் –(இச்சொற்களுக்கு தொடர் அமைக்க.)

46. தமிழ்நாட்டின் தலைநகரம் சென்னை. (விடைக்கேற்ற வினா அமைக்க.)

47. யாரு ஆதித்தனா வா தம்பி என்ன இன்று அதிகாலையிலேயே வந்து விட்டாயே (நிறுத்தற் குறியிடுக.)